கல்குடா கல்வி வலய, பாடசாலைகளின் சுய கற்றல் செயற்பாட்டு பரீட்சைக் குழு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை-புதிய பாடத்திட்டம் 2020

தமிழ் 1 (மாதிரி வினாத்தாள்:04)

# Tamil I

**72 T I**

மூன்று மணித்தியாலம்
மேலதிக வாசிப்பு நேரம்
10 நிமிடம்

அறிவுறுத்தல்கள்:

பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

## பகுதி I

01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**(i)** **படுமழை பொழிந்த பயமிகு புறவின்**
**நெடுநீர் அவல பகுவாய்த் தேரை**
**சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்கக்**
**குறும்புதல் பிடவின் நெடுங்கால் அலரி**
**செந்நில மருங்கின் நுண்அயிர் வரிப்ப**
**வெஞ்சின அரவின் பைஅணந் தன்ன**
**தண்கமழ் கோடல் தாதுபிணி அவிழத்**
**திரிமருப்பு இரலை தெள்ளறல் பருகிக்**
**காமர் துணையொடு ஏமுற வதியக்**
**காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி**
**ஓடுபரி மெலியாக் கொய்சுவல் புரவித்**
**தாள்தாழ் தார்மணி தயங்குபு இயம்ப**
**ஊர்மதி வலவ தேரே சீர்மிகுபு**
**நம்வயிற் புரிந்த கொள்கை**
**அம்மா அரிவையைத் துன்னுகம் விரைந்தே.**

(அ) இப்பாடலின் துறையை விளக்குக.

(ஆ) தலைவியை விரைந்து அடையவேண்டுமென்ற தலைவனின் ஆவலும் ஆர்வமும் எவற்றினூடாக வெளிப்படுகின்றன?

(இ) கையாளப்பட்ட யாதாயினும் பொருளணிகள் இரண்டை எடுத்துக்காட்டுக.

**(ii)** **சுழித்து நீர் வரு துறை யாற்றை, சூழ் படை**
**கழித்து நீங்கியது என, கள்ள வாசையை**
**அழித்து, வேறவனி பண்டாண்ட வேந்தரை**
**இழித்து, மேலேறினான் தானு மேறினான்.**

(அ) இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

(ஆ) ‘கள்ள ஆசை’ எனும் தொடரூடாக கம்பன் உணர்த்த விளைந்தது யாது?

(இ) கையாளப்பட்டுள்ள அணியினை எடுத்துக்காட்டி, அதனூடாக கம்பன் புலப்படுத்தும் உட்கருத்து யாதெனக்குறிப்பிடுக.

**(24 புள்ளிகள்)**



kalvi.lk

02.பின்வரும் (அ)கவிதையை **அல்லது** (ஆ) உரைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**(அ)பின்வரும் கவிதையை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**உலகமிசை உணர்வெழுப்பிக் கீழ்த்திசையின் மீதில்**
**உதித்துவிட்டான் செங்கதிரோன் தகத்தகாயம் பார்?**
**விலகிற்றுக் காரிருள்தான் பறந்ததுபார் அயர்வு**
**விண்ணிலெலாம் பொன்னொளியை ஏற்றுகின்றான் அடடா!**

**மிலையும் எழிற் பெருங்கடலின் அமுதப்ர வாகம்!**
**மேலெல்லாம் விழி அள்ளும் ஒளியின் ப்ரவாகம்!**
**நலம் செய்தான் ஒளிமுகத்தைக் காட்டிவிட்டான், காட்டி**
**நடத்துகின்றான் தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை!**

**ஒளிசெய்தான் கதிர்க்கோமான் வானகத்தில் மண்ணில்!**
**உயர்மலைகள், சோலை, நதி இயற்கை எழில்கள் பார்**
**களிசெய்தான் பெருமக்கள் உள்ளத்தில்! அதனால்**
**கவிதைகள், கைத்தொழில்கள் என்னென்ன ஆக்கம்!**

**தெளிவளிக்க இருட்கதவை உடைத்தெறிந்தான் பரிதி!**
**திசைமகளை அறிவுலகில் தழுவுகின்றார் மக்கள்**
**ஒளியுலகின் ஆதிக்கம் காட்டுகின்றான் வானில்**
**உயர்கின்றான் உதயசூரி யன்வாழ்க நன்றே!**

(i) இக்கவிதையினூடாக கவிஞர் வெளிப்படுத்த விளைந்த விடயம் யாது?

(ii) அதனை வெளிப்பாட்டுப் பாங்கினை எடுத்துக்காட்டுக.

(iii) உதயசூரியனின் வருகை இயற்கையில் ஏற்படுத்திய மாற்றங்களைக் குறிப்பிடுக.

(iv) கவிஞரின் ஆச்சரியக் குறிப்பு இடம் பெறும் இடங்கள் யாவை?

**(16 புள்ளிகள்)**

**(ஆ) பின்வரும் உரைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

ஐந்து வருஷமாக இந்த ஊட்டில தொடர்ந்து மாடா உழைகிறேன். அதிகாலை ஸீபஹீக்கு எழுந்து தேயிலைக்குத் தண்ணி வைத்திற்று, வீடு வாசலைக் கூட்டத் தொடங்கினா, அப்புறம் இரவு ரேடியோவில் பாட்டெல்லாம் முடிந்த பொறகுதான் படுக்கையில் கொண்டு விழுவேன். என்னேரமும் சுழன்று சுழன்று வேலை செய்வது எனக்குப் பழகிப்போயிற்று. சும்மா உட்கார்ந்திருப்பது ஏலாமலிருக்கிறது. "துடிதுடிப்பானவ, அலுப்பில்லாம வேலை செய்வாள். நல்லவள்'' என்று போடியார் பெண்சாதி, வீட்டுக்கு வருகின்றவர்களிடம் என்னப்பந்தி புகழுவா, ஒரு விஷயத்தில் மட்டும் போடியார் பெண்சாதிக்கு என்னோட கோபமும் சந்தேகமும் கூட ஓன்றுமில்ல, போடியாரின் மூத்த மகன் தாஹா என்னோடு கொஞ்சம் இரக்கமாகப் பழகுவார். அவரும் மகா வித்தியாலயத்தில் பன்னிரெண்டாம் வகுப்புப் படிக்கிறார். அவர் உடுப்புகளைக் காயவைத்தால், நான் அதை எடுத்து மடித்துக்கொண்டு போய், அவரது அறையில் வைப்பேன். அவரது அறைக்குத் தேனீர் கொண்டுபோனால், மேசையில் கிடக்கும் புத்தகங்களைப் புரட்டிப் படம் பார்த்துக்கொண்டு நின்றுவிடுவேன். அவர் எதுக்கு எடுத்தாலும், "ஸல்மா, இஞ்சவா,



kalvi.lk

இந்தச் செருப்பில் சேறு பட்டிரிக்கி, அதைச் கழுவிக் கொண்டுவா! குடிக்கத் தண்ணி கொண்டுவா! இந்தத் தலையணைக்கு உறைமாற்று'' இப்படி ஏதாவது வேலை சொல்லிக் கொண்டிருப்பார். ஓளிக்காமல் சொன்னால் அவர் என்ன வேலை சொன்னாலும் அதச் செய்வதில் எனக்கொரு மகிழ்ச்சி.

இந்தச் சம்பவம் ஒன்றும் போடியார் பெண்சாதிக்குப் பிடிக்காது. "வளந்த ஆண் பிள்ளையோட கணக்காகப் பழகனும்டி'' என்று என்னைக் கண்டித்துப் பேசுவா. இதுக்கு நான் என்ன செய்வேன். நான் அவரை மிக மரியாதையாகக் காக்கா எண்டுதான் கூப்பிடுவேன். ஆனால் ஒருநாள் அவர் தான் என்னைக் கையில பிடித்து இழுத்து என் கன்னத்தில் செல்லமாக அடித்தார். இத நான் யாரிடமும் சொல்லவில்லை. இவ்வளவு இரக்கமாக இருக்காரேயெண்டு எனக்கும் அவரோட ஒரு பாசம் இல்லாமற் போகுமா?

இத மனதில் வச்சித்தானோ என்னவோ "அவருக்கும் வயதாப்போயிற்று, எப்படியும் அவள, அவள்ற வீட்டுக்கு அனுப்பினாக்கூட நல்லது. நாம வேற சின்னப் பிள்ளையாக ஒண்டு பாப்பம்'' என்று போடியார் மனைவி, போடியாரிடம் ஒரு நாள் கூறினார். அதுக்கும் போடியார், "இவள அனுப்பினா இவளைப்போல பழகின பிள்ளையொண்டு இலேசில் அகப்படுமா? அதுவும் பதினைந்து ரூபாக்கு எங்கே கிடைக்கப் போகுது?" என்று சொன்னார். போடியார் பெண்சாதி விழுங்கவும் முடியாமல், துப்பவும் முடியாமல் கஷ்டப்பட்டதை குசினிக்குள் நின்ற நான் பார்த்துக்கொண்டிருந்தேன்.

இந்தச் சம்பவத்துப் பிறகு நான் காக்காவோடு அவ்வளவாகப் பழகுவதில்லை. "ஸல்மா! ஸல்மா!! எண்டு அவர் கூப்பிட்டாக்கூட, நான் அவர்ர அறைப்பக்கமே போகமாட்டேன், "என்னெண்டுகேளேன்" எண்டு போடியார் பெண் சாதியும் கூறமாட்டா. பதிலுக்கு அவவே போய் "என்ன தம்பி வேணும்?'' என்று கேட்பா, அல்லது ஸரீனா போய் அந்த வேலையைச் செய்வா, இந்த வித்தியாசம் எனக்கு விளங்காமல் நான் என்ன சிறு குழந்தையா? எனக்கு இதப் பத்திக் கவலையும் இல்லை.

இப்போது காக்கா என்கிறேன், நாளைக்கு மச்சான் என்கிற காலமும் நேரமும் வந்துவிடவா போகிறது? நான் எவ்வளவு நல்லவளாகவும், அழகியாகவும் இருந்தாலும், நான் ஏழை அவங்க பணக்காரர். நான் தண்ணி, அவங்க எண்ணெய், ஒரு போத்தலுக்க இரண்டு இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?

(i) இவ் உரைப்பகுதியில் வெளிப்படும் இசுலாமிய பண்பாட்டம்சங்களைக் குறிப்பிடுக.

(ii) ஸல்மா அனுபவித்த துன்பங்களாக நீர் அடையாளப்படுத்துபவை யாவை?

(iii) ஸல்மாவின் மனதில் அடங்கிக்கிடக்கும் உணர்வுப் பிரவாகங்கள் யாவை?

(iv) கதாசிரியர் இப்பகுதியில் கையாண்டுள்ள மொழிநடை மரபினை மதிப்பிடுக.

**(16 புள்ளிகள்)**

---

## பகுதி II

03. **இடன் அறிதல்** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பகைவரின் அரணின் புறத்திருப்பவர் இடம் அறியுமாறு

(ஆ) வினை செய்வதற்கான இடத்தை அறிதலும் வள்ளுவரின் அணி ஆள்கைத்திறமும்

(இ) பகைமேற்சென்று தாக்கலாகா இடங்களும் தாக்கின் நேருந்தீங்கும்

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

04. **கம்பராமாயணம் குகப்படலத்தில்** பரதன்கங்கையைக் கடக்கவென நாவாய் கேட்க மரக்கலங்கள் ஆற்றில் வரும் காட்சி வரையுள்ள பகுதியில், வெளிப்படும் மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) மரக்கலங்களின் தோற்றமும் செயலும்

(ஆ) யானைகளும் குதிரைகளும் கங்கையைக் கடந்த விதம்

(இ) படகேறிச்சென்ற பெண்களின் நிலையும் அழகும்

(இ) குகன்,பரதன்,சுமந்திரன் ஆகியோரின் பெருமையும் இயல்புகளும்

**(20 புள்ளிகள்)**

05. **இரு துயரங்கள்** நாடகத்தில்,

(அ)நாடக ஆசிரியர் வெளிப்படுத்த விழைந்த கதாபாத்திரங்களின் இரு துயரங்களும் எவை?

(ஆ) பேசுபொருளை வெளிப்படுத்த நாடகாசிரியர் கையாண்ட உத்திகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(இ) டொக்டர் கந்தப்பு பாத்திரத்தின் குணவியல்புகளை மதிப்பிடுக.

(ஈ) இரு துயரங்கள் நாடகம் வெளிப்படுத்தும் படிப்பினைகள் நான்கு தருக.

**(20 புள்ளிகள்)**

06. சு.நடேசப்பிள்ளையின் 'இலங்கை ஆற்றுப்படை'எனும் கட்டுரையை அடிப்படையாக்க கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ)இலங்கை ஆற்றுப்படை எனும் கட்டுரையினூடாக ஆசிரியர் கூறவிழைந்தவை யாவை?

(ஆ)இராமயணத்தில் குறிப்பிட்டுள்ள 'இராவணன் ஆண்ட நாடு இலங்கையே' என்பதனை நிறுவுவதற்காக கொடுக்கப்படும் இலக்கியச் சான்றுகளைக்குறிப்பிட்டு விளக்குக.

(இ)சேது என்ற மகாதிட்டை (பெரிய மணல்மேடு) இராமர் அணை எனக் கட்டுரையாசிரியர் நிரூபிக்குமாற்றினை எடுத்துக்காட்டுக.

(ஈ)ஆற்றுப்படை என்றால் என்ன எனக்குறிப்பிட்டு,அது கட்டுரையோடு பொருந்துமாற்றினை விளக்குக.

**(20 புள்ளிகள்)**

07.வ.அ.இராசரெத்தினத்தின் **ஒரு வெண்மணற்கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது** எனும் நாவலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) நாவலின் நோக்கமும்

(ஆ) சமூக முன்னேற்றத்திற்கு கல்வியின் அவசியமும்

(இ) சமூகப் பின்னடைவுக்கான பிற்போக்கு நிலைகளும்

**(20 புள்ளிகள்)**

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **பாரதியாரின் குயிற் பாட்டில்** தன் நெஞ்சை பறிகொடுத்த மூவகை ஒலிகள்விளக்கம் பெறுமாறு.

(ஆ) **சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில்**,கவுந்தியடிகள் கோவலனுக்குச் சொல்லியவையும் வாழ்வில் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகளும்

(இ) **தேம்பாவணி காட்சிப்படலத்தில்** சாந்தி எனும் இடைச்சி மரியாளிடம் கேட்ட ஐய வினாக்களும் அதற்கு மரியாள் கூறிய விடை வினாக்களும்.

(ஈ) **புறநானூறு நகுதக்கனரே**... எனும் பாடலில் அரசர்க்கு உரியதாகக் கூறப்படும் சிறப்புகளும் பாண்டியன் நெடுஞ்சழியன் கூறிய வஞ்சின வார்த்தைகளும்.

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

கல்குடா கல்வி வலய, பாடசாலைகளின் சுய கற்றல் செயற்பாட்டு பரீட்சைக் குழு
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை-புதிய பாடத்திட்டம் 2020

தமிழ் 11 (மாதிரி வினாத்தாள்:04)
**Tamil II**

**72 T II**

மூன்று மணித்தியாலம்
மேலதிக வாசிப்பு நேரம்
10 நிமிடம்

**அறிவுறுத்தல்கள்:**
பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**பகுதி I**

**01.** எல்லா வினாக்களுக்கும் விடை தருக. மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக. (இவ் விடைப்பத்திரத்தையும் இணைத்துக் கொடுக்கவும்)

1.1. பின்வருவனவற்றுள் அரை மாத்திரைக்குரிய எழுத்து,
1. ஐ 2. அ 3. இ 4. ம் 5. னை
( )

1.2. பின்வருவனவற்றுள் இதழ் குவிந்த உயிர்கள்,
1. அ, ஆ 2. எ, ஏ 3. உ, ஊ 4. எ, ஐ 5. அ, ஒ
( )

1.3. பின்வருவனவற்றுள் இதழ் குவியா உயிர்,
1. உ 2. ஊ 3. ஒ 4. அ 5. ஔ
( )

1.4. பின்வருவனவற்றுள் நெடில்த் தொடர்க் குற்றியலுகரம்
1. நாக்கு 2. ஆடு 3. அஃது 4. வயிறு 5. செய்து
( )

1.5. வகரம் எந்த உயிர்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரமாட்டாது?
1. அ, ஆ 2. இ, ஈ 3. எ, ஏ 4. உ, ஊ 5. ஒ, ஔ
( )

1.6. வேற்றுநிலை மெய் மயக்கம் இடம்பெறும் சொல்.
1. கண்ணன் 2. கட்டம் 3. வெட்கம் 4. நெற்றி 5. வணக்கம்
( )

1.7. பின்வருவனவற்றுள் ‘செத்தான்’ என்பதன் அடிச்சொல்,
1. செ 2. சா 3. செத் 4. சாவு 5. சே
( )

1.8. வினை இடைநிலைக்கு உதாரணம்
1. அறி + ஞ் + அன் 2. குலை + ஞ் + அன் 3. கவி + ஞ் + அன்
4. வலை + ஞ் + அன் 5. போ + ன் + ஆன்
( )

1.9. சில, பல ஆகிய சொற்கள் வேற்றுமைஉருபு ஏற்கும்போது பின்வருவனவற்றுள் எந்தச் சாரியையைப் பெறும்?
1. அத்து 2. அன் 3. அற்று 4. இன் 5. உம்
( )

1.10. சாரியை ஏற்றுப் புணர்ந்த சொல்
1. தேங்காய் 2. பனங்காய் 3. வாழைக்காய் 4. முருங்கைக்காய் 5. பலாக்காய்
( )



kalvi.lk

1.11.இது நம்முடைய பாடசாலை. இவ் வாக்கியத்தில் 'நம்' என்பது,

1. தன்மைப் பெயர் 2. தன்மை பன்மைப் பெயர்
3. உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர் 4. உளப்படுத்தாத் தன்மைப் பன்மைப் பெயர்
5. மரியாதைப் பன்மைப் பெயர்

( )

1.12. இன்று பலரும் வானொலி கேட்பது குறைவு - இதில் வானொலி என்பது,

1. கூட்டுப்பெயர் 2. ஆக்கப்பெயர் 3. வினையால் அணையும் பெயர்.
4. பண்புப்பெயர் 5. மாற்றுப்பெயர்

( )

1.13.'நேற்று வந்தவை இந்தக் கடிதங்கள் தான்' இவ் வாக்கியத்தில் வந்துள்ள வினையாலணையும் பெயர்.

1. நேற்று 2. வந்தவை 3. இந்தக் 4. கடிதங்கள் 5. தான்

( )

1.14. உயர்திணை, அஃறிணை இரண்டுக்கும் பொதுவாய் உள்ள சொற்கள்.

1. குழந்தை, சூரியன் 2. மனிதன், மாடு 3. அம்மா, கிளி
4. ஆடு, மாடு 5. தெய்வம், அக்கா

( )

1.15. வினைமுடிவில் அஃறிணை விகுதியைப் பெற்று வராத சொல்.

1. சூரியன் 2. குழந்தை 3. தெய்வம் 4. மிருகவைத்தியர் 5. சூரியகாந்தி

( )

1.16. 'நோஜிதா நோயால் மெலிந்து விட்டாள்' இத்தொடரில் இடம்பெறும் ஆல் உருபு தரும் வேற்றுமைப் பொருள்.

1. கருத்தா 2. காரணம் 3. உடனிகழ்ச்சி 4. கருவி 5. நீங்கல்

( )

1.17. 'என் மாணவர்களில் பலர் இன்றும் என்னை மதிக்கின்றனர்' இவ் வாக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள உருபு,

1. என் 2. இல் 3. உம் 4. ஐ 5. கின்று

( )

1.18. 'துணைக்கு நீங்களும் கூடப் போங்களேன்' இவ் வாக்கியம்,

1.விருப்பு ஏவல் 2. கடப்பாட்டு ஏவல் 3. எதிர்மறை ஏவல் 4. ஏவல் வினைமுற்று 5.ஏவல் பன்மை

( )

1.19. 'புகையிரதத்தில் மோதுண்டு யானைகள் கொல்லப்பட்டான' இவ் வாக்கியம்,

1. செயப்படுபொருள் குன்றிய வினை 2. செயப்படுபொருள் குன்றா வினை
3. பொது வினைகள் 4. செய்வினை 5. செயப்பாட்டு வினை

( )

1.20.'நான் கொழும்புக்குப் போயிருக்கிறேன்' இவ் வாக்கியத்தில் 'போயிருக்கிறேன்' என்பது,

1. தன்வினை 2. துணைவினை 3. பிறவினை 4. முதல்வினை 5. காரணவினை

( )

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

02. **(அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

நவீன தொழிநுட்பம் வளர்ச்சியடையும்போது அதனை விளக்குவதற்கு ஏற்றபடி மொழியும் வளர வேண்டிய தேவை ஏற்படுகிறது. இயல், இசை, நாடகம் என்பன அடங்கும் முத்தமிழ் பற்றியே முன்னர் பேசப்பட்டது. ஆனால் இன்று நான்காவது தமிழ் என்று அறிவியல்தமிழ் அமைகிறது. அறிவியலுடன் தமிழ் தொடர்புற்றதனால் புதிய கலைச்சொற்கள் புதிய சில இலக்கணக்கூறுகள் புதிய வாக்கிய அமைப்புக்கள் உருவாகின. திமழ்மொழி இவ்வாறு புதிய வளர்ச்சி நிலையைப் பெறத்தொடங்கியது.

அறிவியலில், தமிழ் கலைச்சொற்கள் படைத்தல் இன்றியமையாத ஒன்றாகும். 1852 ஆம் ஆண்டிலேயே அறிவியல் தமிழாக்கமுயற்சி தொடங்கப்பட்டுவிட்டது. மானிப்பாயில் டாக்டர் பிஸ் கிறீன் தலைமையில் மருத்துவக்கல்வி இக்கால கட்டத்தில் தொடங்கப்பட்டடது. அக்கல்லூரியில் பல தமிழ் மாணவர்கள் கற்று வைத்தியர்களாக வெளியேறினர். இக்கல்விக்கான பாடப் புத்தகங்களை தமிழில் டாக்டர் பிஸ் கிறீனே எழுதினார். அதற்கு அவரின் மாணவர் பலரும் பங்காற்றினர்.அங்காதிபாதம் (Anatomy) எனும் நூலில் 'உடற்கூறு' பற்றிய விபரங்களை கூறுவத்றகு ஏற்ற கலைச்சொற்களை அவர் ஆக்கிக் கொண்டார். அறிவியல் தமிழுக்கான கலைச் சொற்களை ஆக்கும் முயற்சி இதனுடன்தான் தொடங்குகின்றது. அந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கலைச்சொல்லாக்கத்துக்கென சென்னை அரசினால், பேராசிரியர் சுவாமி விபுலானந்தர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. பேராசிரியர் சுவாமி விபுலானந்தரின் இந்த முயற்சியினால் பல கலைச் சொற்றொகுதிகள் உருவாக்கப்பட்டன. மலேசியாவில் 1966 இலும் சென்னையில் 1969 இலும் நடைபெற்ற முதலிரண்டு உலகத்தமிழாராய்ச்சி மகாநாடுகளிலும் தமிழில் கலைச்சொல்லாக்கம் பற்றி விரிவான ஆய்வு நடைபெற்றது.

**(13 புள்ளிகள்)**

**(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

அன்பு என்னும் சொல்லுக்கு அர்த்தம் தெரியாமல் ஒருவரிடம் அன்பு செலுத்த எப்படி முடியும்? அன்பு என்றால்,நாம் ஒருவரிடத்தில் அன்பு வைத்திருக்கும் போது அவருக்கு மனதாலும் செயலாலும் தீமை செய்யக்கூடாது, அவருக்கு பொய் சொல்லலாகாது, அவருக்கு ஒரு கஸ்டம் வரும்போது முடியுமானவரை அவருக்கு வரும் கஸ்டத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும், அவர் பசியால் இருக்கும் போது அவர் உண்ண உணவளிக்க வேண்டும், அவர் சுகயீனமாக இருந்தால் அவருக்கு சுகம் கிடைக்க பிராத்தனை செய்யவேண்டும். அவர் எந்த நிலையில் இருந்தாலும் அவரை பார்த்து பொறாமைப்படவே கூடாது. அதோடு அவர்க்கு உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ளவேண்டும். இதுதான் நாம் ஒருவருக்கு செலுத்தும் அன்பு. அன்பு ஒரு வெறும் புகழ்ச்சிக்காக சொல்லும் வார்த்தை இல்லவே இல்லை.

வெறும் புகழ்ச்சிக்காவும், ஆதாயம் பெறுவதற்கும் அன்பு செலுத்துவதாக கூறி 'அன்பு' என்னும் வார்த்தையை கொச்சைப் படுத்தாதீர்கள்.'அன்பு'(Love) என்பது உணர்ச்சி மற்றும் மனநிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளையும் அனுபவத்தையும் குறிக்கிறது. பொதுவாக அன்பு வலுவாகவும், நேர்மறையான அனுபவமாகவும் இருக்கிறது. எளிமையான மகிழ்ச்சி முதல் ஆழ்ந்த தனித்தன்மையான பாசம் வரை அன்பு பல பரிமாணங்களில் வெளிப்படுகிறது. அன்பு என்ற சொல் குறிக்கும் பொருள்களின் எல்லைகளை விளக்க வேண்டுமெனில் இவ்வெளிய எடுத்துக்காட்டை எண்ணி உணரலாம். ஒருவர் தன் தாயின் மீது கொண்ட அன்புக்கும், தன் காதலரிடம் கொண்டுள்ள அன்புக்கும், அவர் ஒரு வகையான உணவின் மீது கொண்டுள்ள அன்புக்கும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதால் அன்பின் ஒருசில பரிமாணங்களை உணரலாம். பொதுவாக அன்பு என்பது ஒரு வலுவான ஈர்ப்பு மற்றும் தனிப்பட்ட உறவுமுறை இணைப்பின் உணர்வைக் குறிக்கிறது.

மனிதநேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றை குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது. மேலும், மற்றொருவரின் நன்மைக்காக பரிபூரணமான அக்கறையும் தன்னலமற்ற விசுவாசம் கொண்ட ஒரு ஒழுக்கமான மனநிலையை அன்பு எனலாம். மற்ற மனிதர்களிடம் அல்லது விலங்குகளிடம் சுயநலமின்றி செலுத்தப்படும் கருணை மற்றும் பாசமுள்ள செயல்களையும் அன்பு என்று விவரிக்கலாம்.
பண்டைய கிரேக்க தத்துவவாதிகள் நான்கு விதமான அன்பை அடையாளம் கண்டனர்: அவை, குடும்ப உறவு (கிரேக்கத்தில் - storge), நட்பு (கிரேக்கத்தில் - philia) காதல் (கிரேக்கத்தில் - eros) மற்றும் தெய்வீக அன்பு (கிரேக்கத்தில் - agape) என்பனவாகும். இனக்கவர்ச்சி, தற்காதல், விசுவாசம் என நவீன எழுத்தாளர்கள் அன்பின் வகைகளை மேலும் வேறுபடுத்தி காட்டியுள்ளனர். மேற்கத்திய நாடுகள் அல்லாத பாரம்பரியத்தினரும் இந்த அன்பின் மாறுபாடுகள் அல்லது அறிகுறிகளை வேறுபடுத்தியுள்ளனர். கூடுதலாக அன்பு என்பது மதம் அல்லது ஆன்மீகம் சார்ந்த பொருளையும் உள்ளடக்கியுள்ளது. இத்தகைய பன்முகத்தன்மை கொண்ட பொருளும் பயன்களும் சேர்ந்துள்ள உணர்வுகளின் சிக்கலான தன்மையால் அன்பு என்ற சொல்லை வரையறுப்பது மிகவும் கடினமானச் செயலாக உள்ளது.

(i) ஒருவரிடம் அன்பு செலுத்தும் போது செய்யவேண்டுவனவற்றையும் செய்யக்கூடாதனவற்றையும் வேறுபடுத்திக் குறிப்பிடுக.

(ii) அன்பு என்பது தொடர்பாக ஆசிரியர் கொண்டுள்ள ஐந்து நிலைப்பாடுகளும் யாவை?

(iii) அன்பின் பரிமாணங்களை உணர்த்த ஆசிரியர் கையாளும் எடுத்துக்காட்டு யாது?

(iv) கிரேக்க தத்துவவாதிகளும் நவீன எழுத்தாளர்களும் அடையாளம் கண்ட அன்பு வகைகள் எவை?

**(12 புள்ளிகள்)**

**(13+12=25 புள்ளிகள்)**



kalvi.lk

03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) திண்மக்கழிவுகள் : முகாமையும் சவால்களும் தீர்வுகளும்
(ஆ) மாணவர்களின் மொழிவிருத்தியில் ஊடகங்களின் பங்கு
(இ) தமிழ் இலக்கியங்களில் பெண்ணியம்
(ஈ) தொலைக்காட்சி நாடகங்கள் : நன்மைகளும் தீமைகளும்
(உ) சமூக நல்லிணக்கமும் நிலைபேறான அபிவிருத்தியும்

**(25 புள்ளிகள்)**

## பகுதி II

04. (அ) சங்ககாலத்தில் தோன்றிய அகத்திணை நூல்களைக் குறிப்பிட்டு, அகத்திணை மரபின் முக்கியமான அம்சங்களை விளக்குக.

(அ) புறத்திணை என்றால் என்னவெனக்குறிப்பிட்டு ஐந்நிலப் போர்கள், காஞ்சித்திணை, பாடாண்திணை என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(இ) சங்கமருவியகால இலக்கியங்களில் அகத்திணை மரபு இடம்பெறுமாற்றைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.

**(15 புள்ளிகள்)**

05. (அ) சோழர்காலத்திலெழுந்த பிரபந்தங்களை வகைப்படுத்திக் குறிப்பிடுக.

(ஆ) அவற்றுள் அக்கால மன்னர்களின் புகழைப் பாடுவனவாக அமைந்த பிரபந்தங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக.

(இ) தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழப் பெருமன்னர் காலம் 'காவிய காலம்' எனப்படுவதன் காரணத்தை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

06.(அ)ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தெழுந்த இலக்கியங்களை பொருள் அடிப்படையில் வகைப்படுத்திக்காட்டுக.

(ஆ) ஒல்லாந்தர் காலப்பகுதியில் தோன்றிய இலக்கியங்களின் பொருள்மரபுகளை எடுத்துக்காட்டுக.

(இ) போரத்துக்கேயர் காலத்தில் பெருமளவுக்குத் தமிழ் நூல்கள் தோன்றாமைக்குரிய காரணங்கள் யாவை?

**(15 புள்ளிகள்)**

07.பின்வருவோரில் யாரேனும் **இருவர்** தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) ஈழத்து பூதன் தேவனார்
(ஆ) அரசகேசரிப் புலவர்.
(இ) ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை
(ஈ) சைமன் காசிச்செட்டி

**(15 புள்ளிகள்)**

08. (அ) **பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**(i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.**

- மருத்துவ சிகிச்சைக்காக ஜப்பானுக்குச் செல்லும் கல்வி ராஜாங்க அமைச்சர் அங்கு ஒரு சத்திர சிகிச்சையை மேற்கொள்வார் எனத் தெரியவருகின்றது.

**(ii) பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவற்ற முறையில் வாக்கியத்தைத்திருத்தி எழுதுக.**

- ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில், விஜய் நடித்து வெளிவரவுள்ள 'சர்கார்' திரைப்படம், எல்லா திரை அரங்குகளிலும் காண்பிக்கப்படமாட்டா.

**(iii) பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக எழுதுக.**

- அவனுடைய நடையில் அமைதி இருந்தது.
- அவனுடைய நடையில் வாழ்க்கையில் புண்பட்டு பண்பட்ட தளர்ச்சி இருந்தது.

**(iv) பின்வரும் வாங்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

- கேரளக்கஞ்சாவை கடத்த முயன்ற ஒரு பெண் உட்பட மூவரைக் கைது செய்தனர்.

**(v) பின்வரும் வாக்கியத்தை அது இருக்கும் ஒழுங்கிலே பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தி மீண்டும் எழுதுக.**

- மூன்று கமராக்களுக்கு முன் உண்மையான காட்சித்தோற்றத்தைக் கண்ணாடியில் பிரதிபலிக்கவைத்து அதை ஒரே நேரத்தில் படமாக்கும் முறைமையை சினிமா ஜாலம் Cine miracle என்பர்

(ஆ) பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்று** பற்றி சிறு குறிப்பு வரைக.

(i) மாற்றுப் பெயர்கள்
(ii) தனிவினையும் கூட்டுவினையும்
(iii) சாரியைகள்

**(15 புள்ளிகள்)**



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page